





# நெகிரி செம்பிலான் மாநில நம்பிக்கைக் கூட்டணி அரசாங்கத்தின் 4 ஆண்டு கால அடைவு நிலைகள்



1. 2018 முதல் இன்றுவரையிலான மாநில கையிருப்பு படிப்படியாக உயர்ந்து முதல்முறையாக 1 பில்லியன் ரிங்கிட்டைக் கடந்தது. ஊழலற்ற ஆட்சியின் திறனை இது புலப்படுத்துகிறது.

2. முந்தைய தேசிய முன்னணி ஆட்சியில் (2017) வெறும் 1.41பில்லியன் ரிங்கிட்டாக மட்டுமே இருந்த முதலீடு இன்று நேர்மையான ஆட்சியின் பலனாக மாநில அரசாங்க பல உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடு களைப் பெற்று முறையே 2019 - 6.96 பில்லியன் ரிங்கிட், 2020 - 7.93 பில்லியன் ரிங்கிட் (வரலாற்றுபூர்வ பதிவு), 2021 - 5.76 பில்லியன் ரிங்கிட் என (கோவிட்-19 காலகட்டம்) பதிவு செய்துள்ளது. இந்த ஆண்டு 10 பில்லியன் ரிங்கிட்டை மாநில அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது.









3. படிக்கும் பழக்கத்தை மேலும் உயர்த்த பழைய நிலையில் இருந்த நூலகத்தை மாநில அரசாங்கம் சகல வசதியுடனும் புதுப் பொலிவுடன் புதிய இடத்தில் அமைத்துள்ளது. அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க இது துணைபுரியும்.



4. நெகிரி செம்பிலான் மாநில நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் 2019-ஆண்டு க்கான முதல் வரவுசெலவுத் திட்டத்தில் மக்களுக்கான 33 நேரடி உதவிகள் அறிவிக்கப்பட்டன. அத்திட்டத்தை படிப்படியாக உயர்த்தி 52 திட்டங்களாக 2022 மாநில வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டன.

5. 2019 முதல் நெகிரி செம்பிலான் நம்பிக்கைக் கூட்டணி அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் துன்ஸ் (TUNS) சிறுதொழில் வியாபாரிகளுக்காக உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டு 3 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப் பட்டது. இத்திட்டம் கட்டம்கட் டமாக உயர்ந்து 2020, 2021, 2022 வரை 12 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கீட்டுடன் சுமார் 7 ஆயிரம் சிறுதொழில் வியாபாரிகள் பயனடைந்தனர். மேலும் 2021 முதல் துன்ஸ் பிளஸ் (கூக்ரீ கூக்கு) திட்டம் அதாவது வட்டியில்லாக் கடனுதவித் திட்ட வழி சுமார் 6 மில்லியன் ரிங்கிட்டில் தொடங்கப்பட்டு 400க்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர் (2021,2022).

6. கல்வியில் யாரும் பின்தங்கிவிடக் கூடாது என்ற சீரிய எண்ணத்தில் நெகிரி செம்பிலான் மாநில நம்பிக்கைக் கூட்டணி அரசு பல உதவித் திட்டங்களை செயல்படுத்தியது.:

- பள்ளிகளைச் சீரமைக்க 2.5 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டது (பள்ளி சீரமைப்பு அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்டது).
- சமயப் பள்ளி/ ஆரம்ப தமிழ், சீனப்பள்ளி/தனியார் பள்ளிகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக 2.5 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டது.
- பள்ளி மாணவர்களுக்கான உதவித் திட்டத்திற்கு 1மில்லியன் ரிங்கிட் (2020இல் - 1818 மாணவர்கள்), 1.3மில்லியன் ரிங்கிட் (2021இல் - 2,400 மாணவர்கள்).
- மாதம் 50 ரிங்கிட் வீதம் தலா 1,333 மாணவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப் பட்டது. இத்திட்டத்திற்கு சுமார் 80 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டது.
- அரசாங்க போலிடெக், உயர்கல்விக் கழகங்களில் பயிலும் நெகிரி செம்பிலான் மாநிலத்தில் பிறந்த மாணவர்களுக்கு மாநில அறக்கட்டளை வாயிலாக 100 ரிங்கிட் உதவித்தொகையாக மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2022 முதல் இத்தொகை 150 ரிங்கிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது.
- அரசாங்க, தனியார் உயர்கல்விக்கழகங்களில் பயில வாய்ப்புக் கிடைத்த மாணவர்களுக்கு முறையே 1,000ரிங்கிட் (இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு), 750 ரிங்கிட் (டிப்ளோமா), சான்றிதழ் படிப்புக்கு 500 ரிங்கிட் வழங்கப்படுகிறது.
- முதல் தரத்துடன் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 5,000 ரிங்கிட் மாநில அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது.

7. மகளிருக்கான மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2019 முதல் 2022 ஆண்டு வரை சுமார் 6 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டது. PH GEM என்ற பிரிவின் மூலம் இதுவரை சுமார் 23 ஆயிரம் மகளிர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

8. உடல் அறுவைச் சிகிச்சைக்கான (எலும்பியல் - implan or thope-dik) உதவியையும் மாநில அரசாங்கம் உருவாக்கியது. இதற்காக 1 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டு 100க்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.





9. 14ஆவது பொதுத்தேர்தலில் நெகிரி செம்பிலான் மாநில நம்பிக்கைக் கூட்டணி வாக்குறுதியான இஸ்லாம் அல்லாதார் விவகாரப் பிரிவு உருவாக்கப்பட்டு 2019 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில் இஸ்லாம் அல்லாதார் வழிபாட்டுத் தலங்களுக்கும் அரசு சார்பற்ற சங்கங்களுக்கும் 5.8 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாம் அல்லாதார் வழிபாட்டுத் தலங்களுக்கு இதுவரை 17 அரசாங்க நிலங்கள் மாநிலப் பதிவேட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் அதிகமான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

